**கிறிஸ்துவின் பிறப்பு விழா 2024**

**மூன்றாவது திருவழிபாடு ஆண்டு**

**2024-12-25**

(*இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம்* 52:7-10,

*திருப்பாடல்* 98: 1. 2-3a. 3cd-4. 5-6,

*எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து வாசகம்* 1:1-6,

*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 1:1-18)

*திருப்பலி முன்னுரை*

*நேர்மையாளர்களே! ஆண்டவரில் களிகூருங்கள் அவரது தூய்மையை நினைந்து அவரைப் புகழுங்கள்!*

*அன்புமிக்க சகோதரரே! சகோதரிகளே! நேர்மையாளருக்கென ஒளியும் நேரிய உள்ளத்தோர்க்கென மகிழ்ச்சியும் விதைக்கின்ற நம் இறைத் தந்தையின் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள் கூறி, நம் மீட்பரும் ஆண்டவருமான இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பு விழாப் பெருமகிழ்ச்சித் திருப்பலியில் கலந்து செபிக்க வந்திருக்கும் உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.*

தம் இரக்கத்தை முன்னிட்டு கடவுள் நம்மை மீட்டார். 'ஆண்டவரால் விடுதலை அடைந்தவர்கள்' என்றும் 'தேடிக் கண்டுபிடிக்கப்பட்டவன்' என்றும் இனி 'கைவிடப்படாத நகர்' என்றும் பெயர் பெறுவாய்.என்னும் இறைவனின் வாக்குறுதிகள் அவலங்களின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு பெரும் ஆறுதல் தரும் செய்தியாக இருக்கின்றன. அவர்களுக்குச் சொல்லப்பட்டவாறு எல்லாம் நிகழ்ந்திருந்தது என்னும் இறைவாக்கும், நமக்குத் தரப்படுகின்ற இறைவனின் வாக்குறுதிகள் நிறைவேறியே தீரும் என்ற உண்மையை அழுத்திக் கூறுகின்றன. ஆண்டவர் நம்மை ஆட்சி செய்கின்றபோதுதான் நாம் முழுமையான விடுதலையைப் பெற்றுக் கொள்ளுகின்றோம் என்பதுதான் இன்றைய முக்கிய செய்தியாக இருக்கின்றது.

இச் செய்திகளை நம் மனத்தில் இருத்திக்கொண்டு, இவ்வுலகில் வாழும் நாம் கடவுளுக்கு உகந்ததோர் வாழ்க்கை வாழவும், எப்பொழுதும் இயேசுவை அயலவரிலும், அருட்சாதனங்களிலும் கண்டு செயல்படுகின்றவர்களாகவும் வாழ வரம் கேட்டுத் தொடரும் திருப்பலியில் செபிப்போம்.

**விசுவாசிகள் மன்றாட்டுகள்:**

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*மீட்பின் ஒளியாம் இறைவா!*

*அமைதியின் அரசராக எம் மண்ணில் பிறந்த கிறிஸ்துவின் அமைதியை இவ்வுலகில் எத்திக்கும் பரப்ப சிறந்த பணியாளர்களாக மாற்ற எம் திருத்தந்தை ஆயர்கள் குருக்கள் துறவியர் அனைவரையும் இறை அமைதியால் நிரப்பி நிறை மகிழ்ச்சியை தந்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம் .*

*மீட்பின் ஒளியாம் இறைவா!*

*இம்மானுவேலனாக எம் மத்தியில் பிறந்த பாலகன் இயேசுவின் உடனிருப்பு இன்று கிறிஸ்மஸ் விழாவினை குதூகலமாக கொண்டாடும் எங்கள் அனைவரின் வாழ்விலும் உடனிருக்கவும் இன்ப துன்ப நேரங்கள், வேதனை சோதனை வேளைகள் , பணிச்சுமை , கடன் சுமை, பொருளாதார சுமை போன்ற இக்கட்டுகளில் நாங்கள் இம்மானுவேலனின் துணையினால் வழிநடத்தப்பட இறைவா மன்றாடுகின்றோம்.*

*மீட்பின் ஒளியாம் இறைவா!*

*அஞ்சாதீர்கள் ! உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார் என்று இடையூர்களுக்கு அறிவிக்கப்பட்ட மகிழ்வின் நற்செய்தி துன்பங்களோடு போராடும் அனைவருக்கும், குறிப்பாக கிறிஸ்தவ விசுவாசத்திற்காக சித்திரவதைக்கு உள்ளாகின்ற விசுவாசிகளுக்கு இன்றைய கிறிஸ்மஸ் மகிழ்வின் விழாவாக அமைய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*மீட்பின் ஒளியாம் இறைவா!*

*ஏழை எளிமை வாழ்வை தேர்ந்துகொண்ட கிறிஸ்துவின் ஆட்சி எம் நாட்டிலும் எம் பங்கிலும் எம் குடும்பங்கலும் நிலவவும் கிறிஸ்மஸ் பெருவிழாவின் மையமாக விளங்குகின்ற பகிர்தல் , புரிதல் , மகிழ்தல் போன்ற கிறிஸ்துவின் மதிப்பீடுகள் இன்றைய திருப்பிலியில் பங்கெடுக்கும் எங்கள் ஒவ்வொருவரின் வாழ்விலும் பிரகாசிக்க வரம் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*